ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் நிதியியல் உளவறிதல் பிரிவு

திகதி 2023.09.14

# பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் தொடர்பான இரண்டாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் மட்டுப்படுத்தப்பட்ட விடய அறிக்கையை இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவு வெளியிடுகிறது

அரச மற்றும் தனியார் துறை பங்குதாரர்களுடன் இணைந்து இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவினால் நடாத்தப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் தொடர்பான 2021/2022ஆம் ஆண்டுகளுக்கான தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் மட்டுப்படுத்தப்பட்ட விடய அறிக்கையை இலங்கை வெளியிட்டது. இம்மதிப்பீடானது நாட்டிலுள்ள பணம் தூயதாக்கல்/பயங்கரவாதிக்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளை இனங்காண்பதை இலக்காகக் கொண்டது. இலங்கை எதிர்கொண்ட மிகவும் குறிப்பிடத்தக்க பணம் தூயதாக்கல்/பயங்கரவாதிக்கு நிதியளித்தல் அச்சுறுத்தல்கள், பாதிக்கப்படும் தன்மைகள் மற்றும் இடர்நேர்வுகளை இம்மதிப்பீடு எடுத்துக்காட்டுகின்றது.

போதைப்பொருள் கடத்தல், இலஞ்சம் மற்றும் ஊழல், வர்த்தக அடிப்படையிலான வரும்படிகளின் பணம் தூயதாக்கல உள்ளடங்கலாக சுங்கத்துடன் தொடர்புடைய குற்றங்கள் என்பவற்றை மிகவும் அதிகம் பரவியுள்ள பாரிய குற்றக்கூறுகளாக தேசிய இடர்நேர்வு மதிப்பீடு இனங்கண்டுள்ளது. இவற்றுள், பணம் தூயதாக்கல் தொடர்பான அச்சுறுத்தல் நடுத்தர குறைந்தளவாக மதிப்பிடப்பட்டது. மோசடி, கொள்ளை, சூழல்சார்ந்த மற்றும் இயற்கை மூலவளங்கள்சார்ந்த குற்றங்கள் என்பன நடுத்தரளவிலான பணம் தூயதாக்கல் அச்சுறுத்தலைக் கொண்டதாகப் பதிவுசெய்யப்பட்டன. ஆட்கடத்தல், வரிக் குற்றங்கள், சட்ட விரோத, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத கடற்றொழில் போன்றவற்றுடன் தொடர்புடைய சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகள் ஆகியவை பணம் தூயதாக்கல் இடர்நேர்வை கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்ட அதேவேளை நாணயம் போலிபுனைதலுக்கான குறைந்தளவான பணம் தூயதாக்கல் நடுத்தர குறைவான அச்சுறுத்தலாக அவதானிக்கப்பட்டது.

மேலும், தேசிய இடர்நேர்வு மதிப்பீடானது பின்வரும் நிதியியல் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்களினதும் தொழில்களினதும் பணம் தூயதாக்கல் இடர்நேர்வை இனங்கண்டது;

| துறை | பணம் தூயதாக்கல் இடர்நேர்வு |
|---|---|
| முறைசாரா பணம் அனுப்புநர்கள் (ஹவாலா/உண்டியல்) | உயர்வானது |
| உண்மைச்சொத்து முகவர்கள் | நடுத்தர உயர்வானது |

| | |
|---|---|
| வங்கித்தொழில் துறை | நடுத்தர உயர்வானது |
| நிதிக் கம்பனிகள் | நடுத்தர உயர்வானது |
| பணப் பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் | நடுத்தரம் |
| பங்கு தரகர்கள் | நடுத்தரம் |
| முதன்மை வணிகர்கள் | நடுத்தரம் |
| சூதாட்ட விடுதிகள் | நடுத்தரம் |
| அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் தொடர்பான வணிகர்கள் | நடுத்தரம் |
| நொத்தாரிசுகள் | நடுத்தரம் |
| சட்டத்தரணிகள் | நடுத்தரம் |
| கணக்காளர்கள் | நடுத்தர குறைந்தளவு |
| நம்பிக்கை பொறுப்பு மற்றும் கம்பனி சேவை வழங்குநர்கள் | நடுத்தர குறைந்தளவு |
| காப்புறுதி | நடுத்தர குறைந்தளவு |

நாட்டிற்கான ஒட்டுமொத்த பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வு **நடுத்தரளவானதாக** மதிப்பிடப்பட்டது.

தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டை அடிப்படையாகக்கொண்டு, இலங்கையின் பணம்தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான தேசிய கொள்கை வரையப்பட்டதுடன் இலங்கையின் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தலை செயற்றிறன்மிக்க விதத்தில் முறியடிப்பதை இனங்காண்பதற்கான இடைவெளிகளை தீர்ப்பதற்கு ஒவ்வொரு ஆர்வலர்களுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளத்தலை ஒழித்தல் தேசிய கொள்கை மற்றும் ஆர்வலர்கள் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்களுக்கு 2023.08.07 அன்று அமைச்சரவையால் அனுமதியளிக்கப்பட்டது. தேசிய இடர்நேர்வு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட சில விதந்துரைப்புக்கள் தொடர்புடைய சட்டங்களுக்கான அவசியமான திருத்தங்களை கொண்டுவருதல், புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தல், நிறுவனசார் கட்டமைப்பை வலுப்படுத்துதல், விசாரணையாளர்கள், வழக்குத்தொடுநர்கள், நீதித்துறை, மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கான திறன் விருத்தி, உண்மைச்சொத்து முகவர்கள், அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் தொடர்பான வணிகர்கள், சூதாட்ட விடுதிகள், கணக்காளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் போன்ற பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபார மற்றும் தொழில்துறைகளின் மேற்பார்வைகளை அதிகரித்தல் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. மேலும், அனைத்தையுமுள்ளடக்கிய தரவுத்தளங்களை உருவாக்குதல் மற்றும் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் தொடர்பான வழக்குத்தொடுத்தல் மற்றும் குற்றத்தீர்ப்புக்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் போன்றனவும் இனங்காணப்பட்ட அதேவேளை மேலும், பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தலுக்கு எதிரான போராட்டத்தில் முகவராண்மைகளுக்கான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு விதந்துரைக்கப்பட்டது.

தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டு அறிக்கையின் மட்டுப்படுத்தப்பட்ட பதிப்பின் பிரதி http://fiusrilanka.gov.lk என்ற நிதியியல் உளவறிதல் பிரிவின் இணையத்தளத்திலும் https://www.treasury.gov.lk. என்ற நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் இணையத்தளத்திலும் கிடைக்கப்பெறுகின்றது.

தேசிய இடர்நேர்வு மதிப்பீடானது 2014இல் முன்னெடுக்கப்பட்ட முதலாவது மதிப்பீடு நடத்தப்பட்டதிலிருந்து 2021/2022ஆம் ஆண்டுகளுக்கான இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான இரண்டாவது அத்தகைய மதிப்பீடாகும். மதிப்பீடு, 2016 தொடக்கம் 2022 காலக்கட்டத்தை உள்ளடக்குவதுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்கள் அனைத்து பங்குதாரா் முகவராண்மைகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றில் சில மைய பணிக்குழுக்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டை முன்னெடுப்பதற்கு உலக வங்கியிடமிருந்து இலங்கை தொழில்நுட்ப உதவியையும் கருவித்தொகுதியையும் பெற்றுக்கொண்டது.

பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகள், அதிகப்படியான குற்ற வரும்படிகளை ஈட்டுகின்ற தவறுகளுக்கு நாடு ஆட்படுகின்ற அதன் அச்சுறுத்தல்களையும் பாதிப்புக்களையும் இனங்காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும் மற்றும் புரிந்துகொள்வதற்கு ஏதேனும் நியாயாதிக்க பிரதேசத்திற்கான முக்கிய படிமுறையாக தேசிய இடர்நேர்வு மதிப்பீடு விளங்குகின்றது. தற்போதைய சட்டவிரோத நிதிச் சூழலைப் புரிந்துகொள்வதற்கும் இடர்நேர்வு தணிப்பு உபாயங்களைப் பற்றி அவர்களுக்கு அறிவூட்டுவதற்கு அரச மற்றும் தனியார் துறைகளுக்கு கிடைக்கும் முக்கிய மூலவளமாக இம்மதிப்பீடு காணப்படுகின்றது.

பல்வேறுவகையில் குற்றவியல் கூறுகள் மற்றும் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களின் மூலமான சுரண்டலிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தையும் நிதியியல் முறைமையினையும் பாதுகாப்பதற்கும் பணம் தூயதாக்கல்/பயங்கரவாதி நிதியளத்தலினால் தோற்றுவிக்கப்பட்ட அச்சுறுத்தல்களுக்கு போதியளவு தீர்வை காண்பதற்கு பின்பற்றக்கூடிய வழிமுறைகளின் மூலம் பாதுகாப்பானதும் ஆற்றல்வாய்ந்ததுமான நிதியியல் முறைமையை உறுதிப்படுத்துவதற்குமான அரசாங்கத்தின் கடப்பாட்டை தற்போதைய மதிப்பீடு வலியுறுத்துகின்றது. தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் திட்டத்திற்கு தீர்வு காண்பதற்கு வலுவான அரசியல் அர்ப்பணிப்பு முக்கியமானதாகும் என்பதுடன் நாட்டில் நிதியியல் குற்றங்களை, இலஞ்சம், ஊழல், பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தலை கையாள்வதில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாட்டை கொண்ட கலாசாரத்தை பேணிவளர்ப்பதற்கு அரசாங்கம் அர்ப்பணித்துள்ளது.

மேலும், தற்போதைய இடர்நேர்வு சூழலை நன்கு புரிந்துகொள்வதன் மூலம், இலங்கையின் நிதியியல் முறைமையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்கு உயர்ந்தளவான இடர்நேர்வு துறைகளுக்கு அதிகளவு வளங்களை தொடர்புடைய பங்குதாரர்கள் தற்போதிருந்தே திறம்பட ஒதுக்கீடு செய்ய முடியும்.

நிதி அமைச்சும் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவும் இத்தேசிய முயற்சியில் பங்கெடுத்த அனைத்து தனியார் மற்றும் அரச துறை நிறுவனங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றியை

தெரிவித்துக்கொள்கின்றன. நிதியியல் உளவறிதல் பிரிவானது மதிப்பீட்டு செயன்முறையை வழிநடத்தியதுடன் நிதி அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, நீதி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சட்டமா அதிபரின் திணைக்களம், இலங்கை பொலிஸ், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், அரச சார்பற்ற அமைப்புகளுக்கான தேசிய செயலகம், கம்பனிகள் பதிவாளர், இலங்கையின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், சூதாட்ட விடுதிகள், உண்மைச் சொத்து முகவர்கள், சட்டத்தரணிகள் சங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அமைப்பு உள்ளடங்கலாக அரச துறை மற்றும் தனியார் துறையிலிருந்து 66 பங்குதாரர்களுடனும் நெருங்கிய ஒருங்கிணைப்பை கொண்டிருந்ததுடன் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் திணைக்களங்களான வங்கி மேற்பார்வைத் திணைக்களம், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம், வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் போன்றவற்றிலிருந்து மொத்தமாக ஏறத்தாழ 150 அலுவலர்களுடனும் ஒருங்கிணைத்தது.